# தீபகச் சுடர்

TO SHARE THE LIGHT

பிப்ரவரி 2024

தீபம் 12 சுடர் 09

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



## மனம் வருந்தி மனம் திருந்தி

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


04.02.2024 பொதுக்காலம் ஐந்தாம் ஞாயிறு - திருப்பலி 02

07.02.2024 அருளாளர் 9ம் பயஸ் - திருப்பலி 04

09.02.2024 அருளாளர் யூசேபியா பாலோமினா ஏனெஸ் - திருப்பலி 05

11.02.2024 பொதுக்காலம் ஆறாம் ஞாயிறு - திருப்பலி 06

14.02.2024 திருநீற்று புதன் - திருப்பலி 08

18.02.2024 தவக்காலம் முதல் ஞாயிறு - திருப்பலி 10

25.02.2024 தவக்காலம் இரண்டாம் ஞாயிறு - திருப்பலி 11

சிலுவைப் பாதை 13


## பகுதி 2: நம்பிக்கையில் வளர...


தவக்காலம் புனிதக் காலம் 24

திருஅவைச் செய்திகள் 26

## பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 04.02.2024 பொதுக்காலம் 5ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. சாம்சன்

I. யோபு 7: 1-4, 6-7 II. 1கொரி. 9: 16-19, 22-23 மாற்கு 1: 29-39

இன்று நாம் மறவ நாட்டு மாணிக்கம் என அன்போடு அழைக்கப்படும் மறைசாட்சியான புனித அருளானந்தர் விழாவைக் கொண்டாடுகின்றோம். இவர் போர்ச்சுக்கல் நாட்டில் லிஸ்பன் நகரில் மார்ச் 1,1647ல் பிறந்தார். ஜான் தெ பிரிட்டோ சிறுவயதில் அடிக்கடி நோய்வாய்ப்பட்டு கொண்டே இருந்தார். இதனால் இவருடைய அன்னை இவரை தூய சவேரியாரிடம் ஒப்புக் கொடுத்து எனது மகன் உயிர் பிழைத்தால் உம்மைப் போல் என் மகனையும் அருட்பணிக்காக அனுப்பி வைப்பேன் என்றார். அதே போன்று இறைப்பணிக்காக அர்ப்பணித்தார். 1662ல் இயேசு சபையில் இணைந்து கொயிம்பிரா பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றார். 1673ம் ஆண்டில் மதப் போதனைக்காக கோவா, தஞ்சாவூர், இராமநாதபுரம், மதுரையில் ஓரியூர் ஆகிய இடங்களுக்கு வந்தார். ஜான் தெ பிரிட்டோ என்ற பெயரை அருளானந்தர் என மாற்றிக்கொண்டார்.

கத்தோலிக்க சமய நெறிகளை பாரம மக்களும் பின்பற்றும் வகையில் போதிக்க உள்ளூர் மொழிகளை கற்றுத்தேர்ந்தார். மதுரையில் தங்கியிருந்தபோது ராணி மங்கம்மாள் காலத்தில் மறவர் சீமைக்கும் மதுரை அரசுக்கும் நல்லுறவு இல்லாததால் கிழவன் சேதுபதி கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய் செயல்பட்டார். மேலும் அருளானந்தருடைய போதனையால் நோய்வாய்ப்பட்ட தடியத் தேவனும் ஜெபத்தின் மூலம் நோய் நீங்கி திருமுழுக்கு பெற்றான். தடியத்தேவன் கிறிஸ்தவ உதவியோடு தலைமையை கைப்பற்றி விடுவானோ என்ற அச்சம் சேதுபதிக்கு இருந்தது. இதனால் அதற்கு காரணமான அருளானந்தரை கைது செய்ய உத்தரவிட்டார்.

1693ம் ஆண்டு பிப்ரவரி மாதம் கொலைகளமாகிய ஓரியூரை நோக்கி குதிரை வண்டியில் கட்டியிழுத்து செல்லப்பட்டார். அவருடைய உடலெங்கும் காயங்கள் ஏற்பட்டு இரத்தம் வழிந்தது. அப்போது அங்கு வந்த ஓர் இளம்பெண் அருளானந்தருக்கு குடிப்பதற்கு மோர் கொடுத்தார். அதை குடித்த பிறகு அந்த பெண்ணிடம் இது எந்த ஊர் என்று கேட்டார். அதற்கு அப்பெண் புல்லூர் என்று கூறினார். அதற்குப் புனிதர், இனி இந்த ஊர் நெல்லூர் என்று அழைக்கப்படும் என்று ஆசி வழங்கினார். சுற்றியுள்ள ஊர்கள் வறண்டுபோனாலும் நெல்லூர் மட்டும் வளம் கொழிக்கும் ஊராக இருந்து வருகிறது. இன்றைய நற்செய்தி வாசகமும் இயேசு நோயாளிகளையும், பேய்ப் பிடித்தவர்களையும் பிணியால் வருந்தினவர்களையும் குணப்படுத்தினார் என்று கூறுகிறது. இயேசு ஊர்





ஊராகச் சென்று நற்செய்திப் பணி செய்ததுபோன்று அருளானந்தரும் பல இடங்களுக்குச் சென்று மறைப்பணியாற்றினார். 1693ம் ஆண்டு பிப்ரவரி 4ம் நாள் ஓரியூரில் தலை, கை, கால்கள் துண்டிக்கப்பட்டு இரத்த சாட்சியாக மரித்தார். இன்றும் அவர் இரத்தம் சிந்திய மண் சிவப்பு நிறமாக உள்ளது.

நாம் இயேசுவுக்காக உயிர்த்துறக்கும்போதுதான் நமது வாழ்வு முழுமைப் பெறுகிறது. நாமும் எத்தகைய இடர் வந்தாலும் நற்செய்திப் பணியை அறிவித்து அதன் வழியாக நம் உயிரை தருவதுதான் நமக்கு முன்னால் இருக்கும் சவாலாக இருக்கிறது. எனவே நமது வாழ்வில் நற்செய்தியை அறிவிப்பதால் ஏற்படும் அனைத்து தடைகளையும் தகர்த்தெறிந்து வாழ இத்திருப்பலியின் வழியாக மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நல்ல ஆயனே இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் நற்செய்தி பணியாற்றும் உம் பிள்ளைகள் அனைவரையும் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பணியை செய்வதில் ஏற்படும் தடைகளை நீக்கி அவர்களின் பணிசிறக்க உமது அருளையும் ஆசீரையும் முழுவதும் வழங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பின் அரசரே இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் தன்னலம் கருதாமல் நாட்டு மக்கள்மீது கவனம் செலுத்தி அவர்களின் தேவைகளை நிறைவேற்றவும், எவ்விதமான பாகுபாடுகளும், ஏற்றத்தாழ்வுகளும் இல்லாமல் தேவையில் இருப்போர் அனைவருக்கும் அவர்களின் குறைகளை நீக்கி மனமகிழ்வினை ஏற்படுத்த வேண்டிய நல்லுள்ளத்தை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. வழிகாட்டும் ஒளியாம் இறைவா, எம் இளைஞர்களை உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் சுயநலமற்று மனம் போன போக்கில் வாழாமல் தங்களின் எதிர்கால வாழ்வை திட்டமிட்டு செயல்படவும் பெற்றோர்களை மதித்து நடக்கவும், வாழ்வில் ஏற்படும் தடைகளைத் தகர்த்தெரிந்து துணிவுடன் உம்மைப் பின்பற்றி வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. நலன் காக்கும் நாயகரே எம் இறைவா, உம்மால் தேர்ந்துக்கொள்ளப்பட்ட மக்கள் அனைவரும் தங்களது பிள்ளைகளை நற்செய்திப் பணி செய்ய முழு உள்ளத்தோடு அனுப்பவும், உமக்கேற்ற குடும்பங்களாக நாங்கள் வாழவும், கட்டளைகளைப் பிடித்து உமக்கேற்ற பாதையில் நாளும் எங்களை வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 07.02.2023 அருளாளர் 9ஆம் பயஸ் திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

கத்தோலிக்க திருஅவை வரலாற்றில் முதல் திருத்தந்தையர்களான புனித பேதுருவிற்குப்பின் அதிக காலம் திருத்தந்தையாக இருந்தவர் என்ற பெருமையை இவர் பெருகிறார். இவரது இயற்பெயர் ஜியோவானி மரிய மாஸ்தைபெரட்டி என்பதாகும். இவர் இத்தாலியில் செனிகல்லியாவில் 1792ம் ஆண்டில் மே 13ம் நாளில் மஸ்தாய் பெரட்டியின் ஜெரோலாமோ மற்றும் உள்ளூர் பிரவுக்களின் கேடரினா சோலாசி ஆகியோரின் மகனாகப் பிறந்தார். சிறுவயதில் நரம்பு தொடர்பான நோயால் பாதிக்கப்பட்டு பிறகு முழுவதும் குணமாகியபின் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். குருவானபின் சில்லிக்கு சென்று மறைப்பணியாற்ற பயணம் செய்தார். இதற்குப்பின் உரோமையில் ஆயராகவும், பணியாற்றினார். தேர்தலுக்குப்பின் திருத்தந்தையாகவும் நியமிக்கப்பட்டார். ஒன்பதாம் பயஸ் என்னும் பெயருடன் பதவி ஏற்றுக்கொண்டார். இவர் திருத்தந்தையாகப் பணியேற்றவுடன் திருத்தந்தை மகாணங்களில் சில அரசியல் சீர்த்திருத்தங்களை கொண்டுவந்தார். பல சங்கங்களையும் ஏற்படுத்தினார்.

ஆன்மீகக் காரியங்களில் இவர் மிகப்பெரிய சாதனைகளை செய்திருந்தார். இவர் இருநூறுக்கும் மேலாக மறைமாவட்டங்களை ஏற்படுத்தினார். இவர் பலபேரை புனிதர்களாகவும் உயர்த்தினார். கத்தோலிக்க உலகத்தையே இயேசுவின் திரு இருதயத்திற்கு அர்ப்பணித்தார். ஜூன் 16, 1875ம் இவர் மரியன்னையை ஜென்மபாவமில்லாமல் உற்பவித்தாள் என்று டிசம்பர் 8,1854ம் ஆண்டு திருஅவையின் நம்பிக்கை சத்தியமாக பிரகடணப்படுத்தினார். சில்லபஸ் (தவறுகள்) என்னும் தப்பறைக் கொள்கைகளை கண்டனம் செய்தது. இதன் தொடர்பாக தப்பறைகளிலுள்ள 80 காரியங்களை/ கருத்துக்களை மிகவும் வன்மையாக கண்டித்து திருமடல்கள் எழுதினார். வத்திக்கான் முதல் பொதுசங்கம் முக்கியமான செயலாகக் கருதப்படுகிறது 1869-70ல் பல தப்பறைக் கொள்கைகள் கண்டனம் செய்யப்பட்டன. இப்புனிதரின் துணிவு, நம்பிக்கையை நாம் பெற அருள்வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, உம் இறையரசின் மதிப்பீடுகளை இவ்வுலகில் நிலைநாட்ட உழைக்கும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், இருபால் துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் ஆசீர்வதித்து, இவர்களுக்கு நல்ல உடல்உள்ள நலனளித்து உமது பணியினை சிறப்பாக செயல்படுத்த





தேவையான அருள்வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பே உருவான இறைவா, இன்றைய நாட்களில் திருஅவைக்கும், மறைப்பணியாளர்களுக்கும் ஏற்படுகின்ற இன்னல்கள், இடையூறுகள், துன்புறுத்தல்கள், வன்முறைகள் அனைத்தையும் நீரே இவற்றிலிருந்து பாதுகாத்து கரம்பிடித்து வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. நம்பிக்கையின் நாயகனே இறைவா, எத்தனையோ இன்னல்களுக்கிடையில் வளர்ந்து வருகின்ற கத்தோலிக்க திருஅவைக்காக என்றும் நாங்கள் உண்மையுள்ளவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 09.02.2024 அருளாளர் யுசேபியா பலோமினா ஏனஸ் திருப்பலி

**முன்னுரை** திருமதி. மாலா செபமாலை

இறையேசுவின் அன்பு பிள்ளைகளே, இன்று அருளாளர் யுசேபியா பலோமினா ஏனஸ் அவர்களின் விழாவினைச் சிறப்பிக்க ஒன்று கூடியுள்ளோம். இவர் 15.12.1899ல் ஸ்பெயின் நாட்டிலுள்ள கான்டல்பினோ, சலமன்கா என்னும் இடத்தில் தந்தை அகஸ்டீன் பாலோமினோ, தாய் ஜூவானா எனஸ் டி லில்லி ப்ளோரெஸ் தம்பதியினருக்கு 3வது மகளாகப் பிறந்தார். குடும்பத்தின் ஏழ்மையின் காரணமாக பள்ளிப் படிப்பை தொடர இயலவில்லை. இவர் வாரத்திற்கு ஒருமுறை சலேசிய சகோதரிகள் நடத்தும் "சான்க்டி ஸ்பிரிட்ஸ்" பள்ளி தேவாலயத்திற்குச் செல்வார். அப்பொழுது சலேசிய அருட்சகோதரிகள் அவர்கள் இல்லத்தில் பணியாற்ற அழைத்தனர். இவரைப் பணிப் பெண்ணாகவும், சமையல் காரியாகவும், விறகு சேகரித்தல், பள்ளியை சுத்தம் செய்தல் போன்ற பணிகள் செய்ய பணித்தனர். இவருக்கு இந்த சலேசிய சபையில் சேர்ந்து அருட்சகோதரியாக வேண்டுமென்ற ஆசை. ஆனால் படிப்பறிவு இல்லையே, அதனால் புறக்கணித்து விடுவார்கள் என்ற அச்சம். எனினும், இல்லத்து உயர் அதிகார அருட்சகோதரிகளின் அனுமதியுடன் 5.8.1922ல் தனது புதிய படிப்பை பார்சிலோனாவில் தொடங்கினார்.

1924ல் "வால்வெர்டே டெல் காமினோ" என்னும் இடத்திலுள்ள இவர்களது இல்லத்திற்கு மாற்றப்பட்டாள். இவள் சொல்லும் ஆன்மீக கற்பித்தலையும், பக்தியையும் கண்டு மாணவர்கள் இவருடன் பயணித்தனர். மேலும் புனிதர்களின் கதைகளால் மாணவர்கள் ஈர்க்கப்பட்டனர். இதனால் இவர் 1930ல் அருட்சகோதரியாக அருட்பொழிவு செய்யப்பட்டார். பல குருக்கள், மதவாதிகள், இவரின் ஆலோசனைக்காக இவரை நாடி வந்தனர். இவர் தன்னை "மரியின் அடிமைத்தனம்" என்று அழைக்கப்படுவதை

விரும்பினார். மேலும் சிலுவை வழியாக கத்தோலிக்கப் பக்தியை பரப்பினர். இந்நாட்களில் மத விரோத உணர்வுகள் மேலோங்கியது. மாநிலத்தின் இரட்சிப்புக்காக தன்னை கடவுளுக்குப் பலியாகக் கொடுத்தார். 1932ல் மருத்துவர்களால் கண்டுபிடிக்க முடியாத நோய் ஆட்கொள்ளப்பட்டு 1935ல் இறைவனடி சேர்ந்தார். அதிகாரப்பூர்வ "நிகில் ஒப்ஸ்டாட்" வெளியிட்டப்பிறகு 15.12.1996ல் திருத்தந்தை 2ம் ஜான்பால் "வணக்கத்திற்குரியவர் என்று பிரகடணப்படுத்தினர். பின்பு 25.4.2004ல் இவர் புனித பீட்டர் பேராலயத்தில் அருட்சகோதரிக்கு "புனிதை" என அங்கீகாரம் செய்தார். இப்புனிதரின் வாழ்வை நாமும் பெற வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அருட்கொடைகளை வழங்குபவரே, உமது திருஅவையின் திருப்பணியாளர்கள் தங்களிடம் ஒப்படைத்த இறைமக்களையும், இறை இல்லங்களையும், உம்வழியில் நடத்திட வேண்டிய நல்ல எண்ணத்தையும், உள்ளத்தையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. நம்பிக்கையின் நாயகரே எம் இறைவா, நாட்டுத்தலைவர்கள் சுயநலம் மட்டுமே தங்களது குறிக்கோளாகக் கொள்ளாமல் மக்களின் நலனே தமது நலனாகக் கருதி நல்லாட்சி புரிந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. கீழ்ப்படிதலின் முன்மாதிரியே இறைவா, இன்றைய இளைய சமூகம் உமது கட்டளைகள் பற்றியும், திருஅவையின் கட்டளைகளைப் பற்றியும் தெரியாமல் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் தங்களின் தங்களின் வாழ்வை சீரழித்துக் கொள்ளாமல் உமது பாதையின் விதிமுறைகளைக் கடைப்பிடித்து உம்வழியில் நடந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 11.02.2024 பொதுக்காலம் 6ஆம் ஞாயிறு — திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

I. லேவி. 13: 1-2, 44-46 II. 1கொரி. 10: 31-11:1 மாற்கு 1: 40-45

கிறிஸ்துவைப்போல வாழ்வதற்கும், அவருடைய நற்செய்தியை நாவில்தோறும் உச்சரிப்பதற்கும் சகோதர சகோதரிகளே, அறிவியல் நாகரிகம் உச்சத்திற்கு வளர்ந்த நம் காலத்திலே, "கொரோனா" பெரும் தொற்றுத் தோன்றியபோது அதன் உண்மைத் தன்மையை முழுவதுமாக அறியாதவர்களாக தனிமைப்படுத்துதல், சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல் போன்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதை நாம் அனுபவித்திருக்கிறோம். 3500 ஆண்டுகளுக்கு முன்னர் மோசேயின் காலத்தில் தொழுநோயைப் பற்றிய சரியான புரிந்துணர்வு இல்லாமல்





இருந்தது பெரிய வியப்பல்ல. தொழுநோய் தொற்றுநோயாக இருந்தாலும், ஒருவரைத் தொடுவதாலோ, அவருடன் பேசுவதாலோ அது பரவிடாது, தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டவரின் உமிழ்நீரோடு தொடர்பிலிருந்தால்தான் அது தொற்றுவதற்கான வாய்ப்புள்ளது.

யூதசமூகத்தில் தொழுநோயாளர், அந்நோயினால் அனுபவித்த வேதனைகளைவிட அவர்கள் சட்டங்களாலும், மரபுகளாலும் நடத்தப்பட்ட விதம் மிகக் கொடியதாக இருந்தது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே முன்சொன்ன கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து, தொழுநோயால் பாதிக்கப்பட்ட நபர்மீது இயேசுவின் கரிசனை அவர்கள்பால் அதிகமாக இருந்தது. அதனால் அவர்களைத் தொட்டு குணமாக்கினார். இன்று உலகமெங்கும் புனித லூர்து அன்னையின் பெருவிழாவைக் கொண்டாடுகிறோம். இன்று "உலக நோயுற்றோர் நாளாக" வும் உலகில் உள்ள உடல்நலம் குன்றியவர்கள், அனைவருக்காகவும் வேண்டுவோம். அதிலும் மருந்தில்லாமல் நோய்களால் துன்புறும் மக்கள் லூர்து அன்னை மரியாவின் பரிந்துரையால் நலம்பெற வேண்டுவோம். கடையராக்கப்பட்டோரைக் கைதூ க்கி விடுவதே திருஅவையின் மேலானபணி, எனவேதான் திருத்தந்தை பிரான்சிஸ் திருஅவை எப்போதும் "அவசர மருத்துவ ஊர்தி" போன்று செயல்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். அதனை "உலக நலம் நாடுவோர் தினமாகிய" இன்றிலிருந்து உடல் உள்ளத்தில் ஏற்படும் மனநோய்கள் நீங்கப் பெற்று யாவரும் நலமுடன் வாழ நம்மாலான உதவி செய்வோம் என வாக்களித்து பக்தியோடு திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அருளும் இரக்கமுடைய நிறைந்த இறைவா, எம் திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், அருட்சகோதரிகள் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இயேசுவின் அழைப்பை உணர்ந்தவர்களாய் கிறிஸ்துவின் சீடர்களாக இவ்வுலகில் வாழ அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. வாழ்வளிக்கும் இறைவா, தீங்கிழைக்கப்பட்டோர், கைவிடப்பட்டோர், கைம்பெண்கள், அனாதைகள், புலம் பெயர்ந்து வாழ்வோருக்காக மன்றாடுகிறோம். இவர்களின் வாழ்வில் மன அமைதியும், அன்பும், இறைபக்தியும் கொண்டவர்களாகவும், எதையும் தாங்கும் இதயமுள்ளவர்களாகவும் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. நோய்தீர்க்கும் மருத்துவரே எம் இறைவா, பலவித நோய்களால் வேதனைப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கும் உம் பிள்ளைகளை கண்ணோக்கும். அவர்களின் துன்ப துயரங்கள், வேதனை சோதனைகளை நீக்கி, நீரே குணமாக்கும் மருத்துவர், ஆறுதலின்

ஊற்று என்பதை உயர்ந்தவர்களாக வாழ்வில் மகிழ்வினைச் சுவைத்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. வாழ்வின் ஒளிவிளக்கே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் முதல் சமூக சேவைப் புரியும் அனைத்து மக்களையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். மக்களுக்காக சேவை செய்யவும், நல்ல திட்டங்களை வகுத்து மக்களின் வாழ்வில் முன்னேற்றத்தைக் கண்டு நன்றியுள்ளவர்களாக வாழ வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 14.02.2024 திருநீற்று புதன் திருப்பலி

**முன்னுரை** திருமதி. லதா சுரேஷ்

யோவே. 2: 12-18 2கொரி. 5: 20-6:2 மத். 6: 1-6, 16-18

இறையேசுவின் பிரியமான சகோதர சகோதரிகளே, திருநீற்று புதன் என்ற புனிதமான நாளுக்குள் நம்மையே நாம் தயாரிக்க இன்று நாம் அழைக்கப்பட்டுள்ளோம். இந்நாள் தவக்காலத்தின் முதல் நாள் இந்நாள்முதல் 40 நாட்கள் நம்மையே நாம் மதிப்பீடு செய்து நம் குணநலன்களில் மாற்றங்களையும், பிறரன்பு, பரிவு, இரக்கம், மன்னிப்பு என்ற மனித மாண்பினை உயர்த்த சிந்தித்து உருகொடுத்திட இத்தவக்காலம் வாய்ப்பாக அமைகின்றது. இந்நாளை ஒருசில இடங்களில் சாம்பல் புதன் என்றும் வெற்று காலம் என்றும் கூறுகின்றனர். வெற்று என்றால் வசந்தகாலம் அல்லது துளிர்விடும் காலம் என்பது பொருள். ஆம், இறையேசுவின் உறவுகளே சாம்பல் என்பது துக்கத்தின் அடையாளம், எளிமையின் அடையாளம், நோன்பின் அடையாளம். நம் ஆன்மாவை ஒளியைக் காணவிடாமல் குற்ற உணர்வில் பாவ இருளில் உழன்று கொண்டிருக்கும் நம்மை சிந்திக்கத் தூண்டி மனமாற்றத்தினைப் பெற்று இன்பமான வசந்தக் காலத்தைக் காண இக்காலம் உதவுகின்றது.

நாம் மனம் மாற்றம் பெற ஒரு காலம் தேவைப்படுகிறது. நாம் ஏன் இக்காலத்தை பெரிதாக நினைவுக் கூர்ந்துக்கொண்டிருக்கிறோம். என்றால் திருவிவிலியத்தின்படி நினிவே மக்கள் பாவம் செய்யும்போது ஆண்டவரின் கட்டளையின்படி யோனா நற்செய்தியை அறிவிக்கின்றார். இதைக் கேட்ட மன்னன் முதல் மக்கள் வரை மனம் வருந்தி இறைவனின் தண்டனையிலிருந்து விடுப்பட்ட சாக்கு உடை உடுத்தி சாம்பலில் உட்கார்ந்து உண்ணா நோன்பிருந்து இறைவனின் மன்னிப்பை பெற்றார்கள். அன்பின் உறவுகளே நாமும் இதனை மையமாகக் கொண்டே சாம்பலை நெற்றியில் பூசி இத்தவக்காலத்தை துவங்குகின்றோம். சாம்பல் புதன் என்பது உயிர்ப்பு ஞாயிறுக்கு முன்வரும் 7வது புதன்கிழமை சாம்பல் புதன் அன்றிலிருந்து தவக்காலம் ஆரம்பமாகின்றது. இச்சாம்பலை குருத்து ஞாயிறு அன்று கொடுக்கப்படும் குருத்தோலையை அடுத்த வருடம் சேர்த்து எரித்து





தயாரிக்கப்படுகின்றது. இச்சாம்பலை குருவானவர் நெற்றியில் பூசும்போது மனம்மாறுங்கள் நற்செய்தியை நம்புகங்கள், மனிதா மண்ணிலிருந்து வந்தாய் மண்ணுக்கே திரும்புவாய் என்பார். எசே.18:32ல் "எவருடைய சாவிலும் நான் இன்பம் காண்பதில்லை" என்கிறார் தலைவராகிய ஆண்டவர். எனவே மனம் மாறி வாழ்வு பெறுவோம்.

மனிதா நீயும் நானும் பாவம் என்னும் சேற்றினில் உழன்று இறைமகன் இயேசுவின் அன்பினை புறக்கணித்து இறையரசை விட்டுவிலகி வாழ்கின்றோம். நம்மை அப்படியே விட்டுவிலகாமல் புனித தன்மைக்கு மாற்ற "செபம், தபம், தானம்" என்ற மூன்றும் முக்கிய கருவியாக விளங்குகின்றது. நம்மை பாவத்தில் விழச் செய்யும் பிசாசின் தந்திரங்களிலிருந்து நம்மை மீட்க இவ்வாயுதத்தை கையில் எடுப்போம். இறையரசுக்கு தகுதிப்பெற நம்மை ஒப்புக்கொடுப்போம். அன்பு சகோதர மனம் திரும்பினால் "நம் மனம் புதிதாக மாறுகின்றது, புதிதாக மாறுவதனால் நாம் மறுரூபம்" அடைகின்றோம். மனிதன் மண்ணிலிருந்து தோன்றிய நாம் மண்ணுக்கே திரும்பப் போகின்றோம். மண்ணிற்கு திரும்பும் முன் நல்ல கிறிஸ்தவ மனிதனாக வாழ்ந்து இறைவனில் சரணடைய இறைஇரக்கத்தை நாமும் பெற்று வாழ இத்திருப்பலி வழியாக மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. உருக்கொடுக்கும் உன்னதரே எம் இறைவா, கிறிஸ்துவின் தூதுவர்களாய், கிறிஸ்துவின் சார்பில் எங்களை விண்ணக அரசுக்கு ஏற்றவர்களாய் மாற்ற தங்கள் வாழ்வையே இறைப்பணிக்காக அளித்த எம் ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் தாம் ஏற்ற வாழ்வின் பொருள் உணர்ந்து கிறிஸ்துவின் சாயலில் வாழத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. மன்னிப்பின் மாமனிதரே எம் இறைவா, மனித மாண்பினைக் காத்திடவும், எங்களில் இருக்கும் குணநலன்களை உணர்ந்து மாற்றம் பெறவும், இத்தவக்காலத்தின் செபம், தவம், தானம் போன்ற தாரக மந்திரத்தை எங்கள் வாழ்வில் ஏற்று மாற்றம் காண தடையாக இருக்கும் எங்கள் குற்றங், குறைகள், பாவங்களை மன்னித்து, உமக்கேற்ற பிள்ளைகளாக வாழ்வில் மாற்றத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. கருணையின் வடிவே எம் இறைவா, உலகெங்கும் பரவி வரும் நவநாகரீக வளர்ச்சி என்ற பெயரில் பெற்றோர்களை தங்களின் பராமரிப்பிலிருந்து தவிர்த்து முதியோர் இல்லங்களில் சேர்ப்பது, அனாதை இல்லங்களில் சேர்க்கின்றனர். அவர்கள் தான் பெற்றெடுத்த பிள்ளைகளின் அன்புக்காக ஏங்கி தனிமையில் வாடுகின்றனர். இவர்களின் நிலையை

உணர்ந்த பிள்ளைகளாக பெற்றோரை தன்னுடன் வைத்து பாதுகாத்து பராமரிக்க வேண்டிய நல்ல மனநிலையை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பின் தகப்பனே எம் இறைவா, பாவங்களிலிருந்து மனம் மாற்றம் என்பது நாம் செய்யும் தலையாய பாவங்களான கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்றவற்றை அகற்றி, ஒவ்வொரு நாளும் உமது உயருள்ள இறைவார்த்தையை வாசித்து உம்மை முழுமையாகப் பற்றிக்கொள்ளும் நல்ல மனதை எங்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 18.02.2024 தவக்காலம் முதல் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

1தொ.நூ. 9:8-15 1பேதுரு 3: 18-22 மத். 5: 17-37

இறையேசுவின் இனிய திருக்குலமே, இன்று நாம் தவக்காலத்தின் முதல் ஞாயிறை சிறப்பிக்க அழைக்கப்பட்டுள்ளோம். முதல் வாசகத்தில் கடவுள் நோவாவிடமும் அவரது புதல்வர்களிடமும் பாவங்களினால் நிரப்பப்பட்ட இவ்வுலகை வெள்ளப் பெருக்கினால் அழித்து நோவாவின் பேழை வழியாக சில மனித உயிர்களோடும் அவர்களோடு இணைந்திருக்கும் மண்ணுலகில் உள்ள எல்லா உயிர்களோடும் அவரது உடன்படிக்கையை நிலைநாட்டுவதாக உறுதி கூறுகிறார். சதையுள்ள எந்த உயிருமே இனி வெள்ளப் பெருக்கினால் அழியாது அதற்கு அடையாளமாக என் விரலை மேகத்தில் பதிக்கிறேன் என்றும் கூறுகிறார். இரண்டாம் வாசகத்தில் பேதுரு பாவங்களின் பொருட்டு கிறிஸ்து இயேசு இறந்து உயிரோடு எழுப்பப்பட்டார். மனித இயல்பில் அவர் இறந்தாலும் ஆவிக்குரிய இயல்பில் உயிர்பெற்றெழுந்தார். கடவுள் எச்சரித்த போதும் ஏற்றுக்கொள்ளாத மக்கள் அழிந்தபோது சிலர் அதே பேழையில் தண்ணீர் வழியாக காப்பாற்றப்பட்டனர்.

தண்ணீரானது திருமுழுக்கிற்கு அடையாளமாக இருந்தது மனிதத்தை புனிதப்படுத்தும் செயலாக அதாவது கடவுளுக்கு குற்றமற்ற மனசான்றுடன் தன்னை புனிதப்படுத்தும் செயலாக இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு மீட்பளிக்கும் பயன்பாட்டை உறுதி செய்கிறது. இதே உண்மைதான் நற்செய்தியில் மாற்கு கூறும் இயேசுவின் கூற்று. "காலம் நிறைவேறிவிட்டது, இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்" என்பது. பாவங்களினாலும் தீமைகளாலும் நிரப்பப்பட்டிருந்த பழைய உலகை வெள்ளப்பெருக்குக் கழுவி புதிய உலகு உதயமாக காரணமாயிருந்த தண்ணீரானது திருமுழுக்கிற்கு அடையாளமாக இருந்ததுபோல, நினிவே மக்களைப்போன்று மனம்மாறு இறையரசை வளர்க்க ஆண்டவர் நம்மை அழைக்கின்றார். மனம்மாறும்போது புதிய வாழ்வு வாழ இறையருள் வேண்டி இத்திருப்பலியில் இணைவோம்.





**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அனைத்துமானவரே எம் இறைவா, எங்கள் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், அருட்பணியாளர்கள், துறவற கன்னியர்கள் மற்றும் அனைத்து திருநிலையினரும் உமது பிறப்பையும் இறப்பையும் நினைவுகூர்ந்து தூய உள்ளத்தோடும் அர்ப்பண உணர்வோடும், சீடத்துவ வாழ்வாலும் உம்மை மகிமைப்படுத்த அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, கல்வி பயின்று கொண்டிருக்கின்ற ஒவ்வொரு மாணவ மாணவியரையும் உம்முடைய அளவில்லாத அருட்கொடைகளால் நிரப்பி, அவர்களின் ஞாபகச் சக்தியை அதிகரித்து, எதிர்கால வாழ்வை சிறப்பாக ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. உம் ஆசீரை அளவில்லாமல் வழங்குபவரே, இத்தவக்காலத்தில் உம் அன்பிலும் செபவாழ்விலும், தூய அருட்பொழிவினாலும் நாங்கள் ஆட்கொள்ளப்பட்டு எங்கள் வாழ்வை உம்முடைய ஆசீரால் நிரப்பி எம்மை தூய்மையானவர்களாக உருவாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. படைத்த நாள் முதல் ஒவ்வொரு நொடியும் எங்களோடிருந்து எங்களை காப்பவரே, உம் அளவில்லா அன்புக்கு நாங்கள் அடிபணிந்து, எங்களை நாங்கள் முழுமையாக உம்மிடம் ஒப்படைக்கின்றோம். எங்கள் குடும்பங்களிலும், பங்குகளிலும் ஒற்றுமை, சமாதானம் சீர்குலைந்திடாமல் அன்பினால் ஒன்றுபட்டவர்களாக நாங்கள் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 25.02.2024 தவக்காலம் 2ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

I. தொ.நூ. 22: 1-2, 9-13, 15-18 II. உரோ. 8: 31-34 மாற்கு 9: 2-10

தவக்காலம் இரண்டாம் ஞாயிறு திருப்பலியை இணைந்து நிறைவேற்ற கூடியுள்ளோர் அனைவரையும் அன்போடு வரவேற்கின்றோம். மலை அனுபவம் என்பது திருவிவிலியத்தில் பலமுறை பார்த்து படித்து தியானித்துள்ளோம். அது நமக்கு அறிவுறுத்துவது மலைபோல் உயர்ந்த உள்ளமும் சிந்தனைகளையும் தெளிவான கருத்துக்களையும் நாம் ஏந்தி தாங்கி வாழ அழைக்கின்றது. இறைவார்த்தை மூலம் நமக்கு அறிவிக்கின்ற குரலுக்கு ஆழமாக செவிசாய்க்க வேண்டும். செவிமடுப்பது மட்டுமல்ல செயலாக்கத்திற்கும் கொண்டு வர வேண்டும் . அப்போதுதான் முழுமை பெரும் நம் வாழ்வு என்பதனை ஆபிரகாமிற்கு அளித்த ஆசீர் மூலம் இறைவன் நமக்கு கூறுகின்றார். இதனையே இன்றைய இரண்டாம் வாசக செய்தியும் தருகிறது. இறைவனைச் சார்ந்து இருப்போருக்கு அனைத்து

நலன்களும் பெருகும் என அறிகின்றோம். நற்செய்தியிலும் வரும் இறையனுபவம் இறைவனோடு ஒன்றித்து இருப்பதையும், அதற்கு தூய்மை தேவை என்பதை காட்ட வெண்மையும், மேகம் நிழலிடுவது இறைபாதுகாப்பு உண்டு என்பதும் திண்ணமாக தெரிகிறது. இப்பேர்பட்ட மாட்சிமையை பெற அமைதியை கை கொண்டு வாழவும் அழைக்கின்றது. இதனையே இறைஇயேசு தம் திருத்தூதர்களுக்கு கட்டளையிடுகின்றனர். யாரிடமும் கூறாதிருங்கள் என இதனைக் கேட்ட அவர்களுக்கு குழப்பம் வருகிறது. ஆனால் மனதில் இருத்தி சிந்திக்கின்றனர். அதுதான் பிற்காலத்தில் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து சோர்விலும், சவால்கள் மத்தியிலும் உலகெங்கும் திருத்தூதுரைத்து செயலாற்ற முடிந்தது, வெற்றியை தந்தது.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, இறைவார்த்தையை இறைவனின் குரல் மூலம் கேட்டு செவி சாய்த்து கீழ்ப்படிந்து செயலாற்றிய முதுபெரும் தந்தை ஆபிரகாமைப் போல எமது திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள் இருபால் துறவியர்கள் செயல்பட வேண்டிய அத்தனை வரங்களையும் அளித்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. கருணையே உருவான இறைவா, மக்கள் அனைவரும் புத்தாண்டில் பல்வேறு எதிர்பார்ப்பு எண்ணங்களோடு அதனை நிறைவேற்ற பல முன்னெடுப்புகளை செய்வர். முதலாவதாக இறைவனைச் சார்ந்தும் தூய்மையை கடைபிடித்தும் இறை பாதுகாப்பும் தேடி அதன் மூலம் ஆசீர்வாதங்களை பெற்று சீரும் சிறப்புடன் வாழ அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. பாடுகளை ஏற்ற இறைவா, இன்றுள்ள எண்முறை (டிஜிட்டல்) இந்தியா மற்றும் மின்னணு உபகரணங்கள் சில நன்மைகள் தருகின்றன என்றாலும் பள்ளி, கல்லூரி, சிறு பிள்ளைகள், பெரியவர்கள் கூட பெண்களும் ஏமாற்றப்பட்டு, விளையாட்டு, மற்றும் சூதாட்டம் மூலம் தங்களை அறியாமல் நம்பி உயிர்பலி ஆகின்றனர். தேவைக்கு மட்டும் பயன்படுத்தி பாதுகாப்போடு பலன் பெற வேண்டிய அறிவையும் ஞானத்தையும் அளித்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
4. காலங்களை கடந்த இறைவா, உலக மக்கள் அனைவரும் நீர் அருளும் ஒளியில் நடந்து அன்பு அறச் செயல்களில் ஈடுபட்டு ஒற்றுமை, சமாதானம், மகிழ்ச்சி பெருகி வாழ தூய ஆவியின் வல்லமையால் நிரப்பிட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.





## சிலுவைப் பாதை

**முன்னுரை**

திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

**சிலுவை மரம் பேசுகிறது:** நான் மரம்தான் என்னை இயேசு தொடாதவரை. இயேசு என்னைத் தொட்டபின்பு புனிதச் சின்னமானேன். நீண்டு பரந்த அன்புகொண்ட இறைவனை நெடுமரமாகவும், குறுகிய மனம் கொண்ட மனிதனை குறுக்கு மரமாகவும், கொண்டு சிலுவையாக காட்சியளிக்கின்றேன். பாவத்தால் இறைவனை விட்டுப் பிரிந்த மனிதனை இறைவனோடு இணைத்ததால் எனக்கு பெருமை. அவமானம், வெறுப்பு, மடமை, இடறல் இவற்றின் மொத்த அடையாளமான சிலுவையை நமது ஆண்டவர் புனிதச் சின்னமாகக் கருதி சுமந்து செல்கிறார். நம்மையும் அவரோடு அழைக்கின்றர். "உன்னுடைய சிலுவையை ஏற்றுக்கொண்டு என்னை பின்செல்" என்று. சிலுவைப் பாதை பிறரை அன்பு செய்ய, வழிவகுக்கும் பாதை. "நீர் அரசுரிமை பெற்று வரும்போது என்னையும் நினைவு கூறும்" என்ற நல்ல கள்வனின் பாதை. சிலுவைப்பாதையில் இயேசுவின் பாடுகளை சிந்திக்கும்போது நமது வாழ்க்கைப் பாதையின் நிகழ்வுகளையும் நெஞ்சுருக நினைப்போம். நாள்தோறும் நாம் சந்திக்கும் பிரச்சனைகளும், நவீனகாலத்து சிலுவைகள்தான். அவற்றை சாதூ ர்யத்தோடு தூக்கிச் செல்லும் சராசரி துணிவையாவது பெற்றுக்கொள்ள இயேசுவைத் தொடர்ந்து நாம் கல்வாரியை நோக்கி நடப்போம்.

### முதல் நிலை: பிலாத்துவால் இயேசு தீர்ப்பிடப்படுகிறார்

**திவ்விய இயேசுவே...**

**இறைவார்த்தை:** "அவர் கைது செய்யப்பட்டு, தீர்ப்பிடப்பட்டு இழுத்துச் செல்லப்படுகிறார். அவருக்கு நேர்ந்ததைப்பற்றி அக்கறைக் கொண்டவர் யார்?" எசாயா 53:8.

**சிந்தனை:**

மனதே இல்லாதவர்களையும் மனிதர் என்று அழைப்பதுபோல நீதி செயல்படாத மனிதரையும் நீதிமன்றம் என்றுதான் அழைக்க வேண்டியிருக்கிறது. வழக்கு என்று வந்தால், தராசு முள்ளைப்போல் சாய்ந்துவிடாத, பாரபட்சம் பார்க்காத நடுவர்கள் வேண்டும். இயேசுவை ஒழித்துவிட வேண்டும் என்கிற ஒற்றைவரி தீர்ப்பை எப்போதோ எழுதிவிட்டு இப்போது கண்துடைப்புக்காக ஒரு விசாரணை. இது மக்களின் தீர்ப்பாகவே இருக்கட்டும் என்பதைக் காட்டுவதற்கு மக்கள் மன்றத்திலே விசாரணை நடைபெறுவதாக நாடகம். சுய சிந்தனையை சுத்தமாய் தொலைத்தவர்கள் பொது ஜனங்கள். இந்த ஒட்டுமொத்த கூட்டுச் சதியிலிருந்து நேர்மையான இயேசு எப்படி வெளியே வரமுடியம்? இங்கு இயேசு குற்றமற்றவர் என்று தெரிந்திருந்தும் பிலாத்து பதவியைக் கெட்டியாக பிடித்துக்கொள்ள "உண்மையை" பொய்மை என்று

தீர்ப்பிடுகிறான். இன்று சமூகத்தில் நீதிமன்றங்களில் குற்றமற்றவர்கள் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை பெறுகிறார்கள். உலகம் அறிய குற்றம் செய்த அமைச்சர்கள், அரசியல்வாதிகள் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி தண்டையிலிருந்து தப்பித்துக்கொள்கிறார்கள்.

**செபம்:**

நீதியின் நாயகனே, எம் இறைவா, அநீதியும், அக்கிரமும் எங்கள் வாழ்க்கைப் பாதையில் அடிக்கடி சேர்ந்து கொள்கிறது. எங்கள் அநீதிச் செயல்களே உமக்கு அக்கிரமத்தீர்ப்பை வாங்கித்தந்தது. எங்களுக்கு நீதியின் கண்களைத் திறந்து விட்டு எங்களை நேரிய வழியில் நடத்தியருளும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும்...**

## இரண்டாம் நிலை: இயேசுவின் தோள்மீது சிலுவையை சுமத்துகிறார்கள்

**திவ்விய இயேசுவே...**

**இறைவார்த்தை:** ஆடுகளைப்போல நாம் அனைவரும் வழிதவறி அலைந்தோம், நாம் எல்லாரும் நம் வழியே நடந்தோம், ஆண்டவரோ நம் அனைவரின் தீச்செயல்களையும் அவர்மேல் சுமத்தினார். எசாயா 53: 6

**சிந்தனை:**

அக்கிரமச்சிலுவை ஒரு அப்பாவியின் மீது சுமத்தியது மனித உரிமை மீறலுக்கு வரலாற்று சாட்சியமாகும். குற்றவாளிகளின் குறியீடாக இருந்த சிலுவை குற்றம் செய்யாத ஒருவரின் தோள்மீது சுமத்தியதைப்பார்க்கும் சிந்திக்கத் தெரிந்திருந்த மனிதரையும் சிலிர்த்தெழச்செய்யும். சிலுவை சுமக்கிற அளவுக்கு இயேசுவின் எந்தச் செயலும் இருந்தது கிடையாது. இயேசு சிலுவையின்மீது நம் பாவங்களை அவரே சுமந்தார். இங்கு இயேசு நம் பாவங்கள், தீச்செயல்கள் என்ற சிலுவையை சுமந்து செல்கிறார். வெற்றிக்கொடியை இரண்டு வீரர்கள் கையில் ஏந்தி முன்னேறுவது போன்ற வெற்றிச் சின்னமாகிய சிலுவையைக் கண்ட இயேசு அதனை முத்தமிட்டு இரத்தம் தோய்ந்த தம் தோள்மேல் ஏற்றுக்கொள்கிறார்.

**செபம்:**

என் நேச இயேசுவே, "உன் சிலுவையைத் தூக்கி என்னைப் பின்செல், என்றுரைத்தீர். ஆனால் நான் துன்பதைக்கண்டு திடுக்கிட்டேன். எனக்கு குறைநேர்ந்தபோது உம்மை இகழ்ந்தேன். உம்மை இகழ்ந்த தருணத்திற்காக என்னை மன்னியும். இனிமேல் துரிதமாய் உமக்காக என் சிலுவையைச் சுமப்பேன், என் மனத்தை உறுதிப்படுத்தும். ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**





## மூன்றாம் நிலை: இயேசு முதல்முறை தரையில் விழுகிறார்

**திவ்விய இயேசுவே...**

**இறைவார்த்தை:** என் குற்றங்கள் என்னும் நுகம் அவர்கையில் பூட்டப்பட்டுள்ளது. இவை பிணைக்கப்பட்டு, என் கழுத்தைச் சுற்றிக் கொண்டன. அவர் என் வலிமையைக் குன்றச் செய்தார். நான் எழ இயலாத நிலை. என் தலைவர் என்னை அவர்கள் கையில் ஒப்புவித்தார். புலம்பல் 1:14

**சிந்தனை:**

மனித பலவீனத்திற்கு அவர் விதிவிலக்கல்ல, அடிகள் வாங்கி, சதைகள் கிழிந்து, உடல் தளர்ச்சியுற்றது, நா வறண்டு விட்டது, பார்வை குன்றியது, கால்கள் வலுவிழந்துவிட்டது, கல்லிலும் முள்ளிலும் நடந்துவந்த வேதனை, சோர்வு மேலும் பாரமான சிலுவை தரும் அழுத்தம், மனவேதனை இவைகள் இயேசுவை உந்தித்தள்ளின. அதனால் இயேசு முகங்குப்புற கீழே விழுகிறார். நான் தலைக்கனத்தால் திமிர்கொண்டு அலைந்தேனா? துர் இச்சையால் கீழே விழுந்து பாவத்தூசியில் மண்டிக்கிடக்கவில்லையா? பாவ விழியிலிருந்து எழுவதற்கு முயற்சி செய்தேனா? இயேசுவே, உம்மைத்தூ க்கிவிட ஆவலாய் இருக்கிறேன். ஆனால் எங்கள் பாவங்களின் பாரத்தால் நாங்களே கீழே விழுந்து கிடக்கிறோம். எங்களை மன்னியும் ஆண்டவரே.

**செபம்:**

ஆண்டவரே, நீர் மிகவும் வெறுக்கின்ற பாவம் சுயநீதியே நான் இனிமேல் என் சுயரீதியில் நடக்காதபடி என் பாவத்தை இதயத்தில் உணர்ந்து நான் அசுத்த உதடுகள் மனிதன், என்னை மன்னியும், என்று கதற உமது தூய ஆவியானவர் என் கண்களைத் திறப்பாராக, நீரும் என்மேல் இரக்கம் வையும், ஆண்டவரே. ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும்...**

## நான்காம் நிலை: இயேசு தம் தாய் மரியாவைச் சந்திக்கிறார்

**திவ்விய இயேசுவே...**

**இறைவார்த்தை:** மகளே எருசலேம் உன் சார்பாக நான் என்ன சொல்வேன்? உன்னை எதற்கு ஒப்பிடுவேன்? மகன் சீயோனே கன்னிப்பெண்ணே, யாருக்கு உன்னை இணையாக்கித் தேற்றுவேன் உன்னை? உன் காயம் கடலைப்போல் விரிந்துள்ளதே, புலம்பல் 2:13

**சிந்தனை:**

தூய அன்னையே, பாதகரிலும் கேவலமாய்க் காட்சியளிக்கும் இவரா உம் மகன்? குருதியில் தோய்ந்த மேனி, அழுத்தும் சிலுவையைத் தாங்கும் தோள் இருத்தும் முட்களை அணிந்த சிரசு, தள்ளாடித் தவிக்கும்

மகன், தன் மகனின் வலியையும் வேதனையையும் உணர்ந்து மனநிறைவு மற்றும் ஆறுதல் தர ஓடோடி வந்து சந்திக்கிறார் தாய் மரியா. இங்கு இரண்டு பக்கமும் மௌனம். ஆம் மௌனம் சந்தித்துக்கொள்கின்றன. இந்த சந்திப்பு இயேசுவிற்கு மீட்பின் பயணத்தைத் தொடர ஆறுதல் தந்தது இந்த சந்திப்பின் பிறகுதான் சீமோனின் உதவி இயேசுவுக்கு கிடைத்தது. அன்னை தந்தையிடம் பரிவு காட்ட முன் வந்தேனா? என்னால் அவர்கள் இரத்தக்கண்ணீர் வடித்தார்களா? பெற்ற குழந்தைகளைக் கண்ணும் கருத்துமாய்ப் பேணி வளர்த்தேனா? இன்று எத்தனைபேர் தங்களுடைய சுயநலத்திற்காக தாய்மார்களை விரட்டியடித்து, முதியோர் இல்லத்தில் ஒப்படைத்துள்ளார்கள் என்று சிந்திப்போம், நாமும் நம் வாழ்வில் பெற்றோரை எந்நிலையில் வைத்துள்ளோம் என்பதை உணர்ந்தவர்களாக இச்சிலுவைப் பாதையில் அதற்காக மனவருந்தி மன்னிப்பு வேண்டி செபிப்போம்.

**செபம்:**

தாயே, இறைவனின் அன்னையே, நீரும் உம் மகன் பக்கத்திலிருந்து தொடர்ந்து கல்வாரிக்குச் சென்றது போன்று என் பக்கம் எப்போதும் முக்கியமாய் என் மரண நேரத்திலும் இருந்து உதவ மன்றாடுகிறேன். பரம தந்தையே தாயும் மகனும் தவித்துத்தள்ளாடித் தெருவில் நிற்கும். இப்பரிதாபக் காட்சிக்கு நானும் ஒரு காரணமானதால் என்னை மன்னியும். ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**

**ஐந்தாம் நிலை: இயேசுவுக்கு சீமோன் உதவி செய்கிறார்**

**திவ்விய இயேசுவே...**

**இறைவார்த்தை:** உன்னை வெறுக்கும் ஒருவரின் கழுதை சுமையினால் படுத்துவிட்டதை நீ கண்டால் அந்த நிலையில் அவரை விட்டகலாதே, அதைத் தூக்கிவிட அவருக்கு உதவி செய். வி.ப. 23:5

**சிந்தனை:**

சிலுவை சுமக்க சீரேனான சீமோனை கட்டாயப்படுத்துகிறார்கள். சிலுவையின் வெட்கத்தைக் கண்டு பாவக்கறையாகிய சிலுவையை சுமக்க சீமோன் பின்வாங்குகிறார், மறுக்கிறார், பின்பு அச்சிலுவையில்தான் மீட்பு உள்ளதென்பதை அறிந்து அதை அள்ளி அரவணைக்கிறார். நான் என் வாழ்வில் பிறர் கஷ்டத்தைக் குறைக்க என்ன செய்தேன்? பிறர்சுமையைச் சுமைக்க அவர்களுக்கு எந்த வகையில் உதவினேன்? இயேசுவோடு பந்தியில் அமர அநேகர் இருந்தனர். ஆனால் சிலுவையைத் தூக்க எவரும் முன்வரவில்லை. அவரோடு உண்டு, உறவாடிய, உலாவந்த சீடர்கள் எங்கே? இன்று நாம் இயேசுவின் சிலுவையைச் சுமக்க முன்வர





தயாராக இருக்கிறோமா? பாவச்சங்கீர்த்தனம் செய்து பாவ வாழ்க்கையை விட்டுவிடத் தயாராக இருக்கிறோமா?

**செபம்:**

ஓ கிறிஸ்தவனே, உன் மகிமையை உணர்வாயாக, நீ மறுகிறிஸ்துவாக இருந்தால் கிறிஸ்துவுக்கு ஆறுதல் அளிக்க வரமாட்டாயா? ஆம் ஆண்டவரே, இதுவரை உம் சிலுவையை நான் தூக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் இப்போது ஆவலாய் இருக்கும் என்னை ஏற்றருளும், அன்றாடம் சிலுவையை அன்போடு அரவணைக்க, தூக்கி சுமக்க வரம் அருளும். ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**

**ஆறாம் நிலை: இயேசுவின் முகத்தை வெரோணிக்கா துடைக்கிறாள்**

**திவ்விய இயேசுவே...**

**இறைவார்த்தை:** ஆண்டவரையும் அவரது ஆற்றலையும் தேடுங்கள், அவரது திருமுகத்தை இடையறாது நாடுங்கள் (1குறிப்பேடு 16:11)

**சிந்தனை:**

காயம், இரத்தம், வியர்வை, தூசி இவற்றால் இயேசுவின் திருமுகம் கறைப்படிந்திருக்கிறது. தீயவர்கள் நடுவில் இவ்விதம் தோன்றும் இயேசுவின் முகத்தை பெண் வெரோணிக்கா, துணிவுடன் விரைந்து சென்று, துணியால் துடைக்கிறார். இயேசுவின் திருமுகம் அதில் பதிகிறது. அவரது திருமுகத்தை இடையராது நாடி வெரோணிக்கா மீட்புப்பாதையில் நடந்து சென்றாள். உன் இதயத்தில் பதிந்திருப்பது இயேசுவின் திருமுகமா? உலகப்பற்றா? இயேசுவிடம் மன்றாடி அவரவர் திருமுகத்தை இடையறாது காணச்செய்யும் வரம் பெறுவோம்.

**செபம்:**

என் நேச இயேசுவே, உம்முகம் இரத்தக்கரை படிந்திருந்ததுபோல, என் ஆன்மாவிலும் பாவக்கறை படிந்துள்ளது. திருமுழுக்கின்போது தூய்மையான என் இதயம் இன்று தீய நாட்டங்கள், தீயச்செயல்கள் ஆகியவற்றால் மாசுபட்டுள்ளது. இக்கரைகளை உம் இரத்தத்தால் கழுவும். உம் திருமுழுகத்தை என்மீது புதுப்பியும். உம் திருமுகத்தை என்மீது திருப்பி ஆசிர்வதித்தருளும் ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**

**ஏழாம் நிலை: இயேசு இரண்டாம் முறை தரையில் விழுகிறார்**

**திவ்விய இயேசுவே...**

**இறைவார்த்தை:** மெய்யாகவெ அவர் நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார், நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார். எசாயா 53:4

**சிந்தனை:**

நடக்க சக்தியற்றவராய் தட்டுத்தடுமாறி இயேசு இரண்டாம்முறை கீழே விழுகிறார். சிலுவை அவர்மேல் விழுந்து அழுத்துகிறது. காய்ந்திருந்த காயங்கள் திறக்கின்றன. இரத்தம் வெள்ளமாகப் பாய்கிறது. முள்முடி சூடிய தலை தரையில் விழுந்ததால் கூறிய முட்கள் தலையின் உள்ளே ஊடுருவச் சென்று பெரும் வேதனை அளிக்கின்றன. தாழ்ச்சியைக் கற்றுக்கொடுத்த இறைவன், சீடர்களின் பாதங்களைக் கழுதி முத்தம் செய்த தேவன் இப்போது கொடியவர்களின் கால்களில் புழுப்போல் நசுங்கிக் கிடக்கிறார். என் பாவங்களின் சுமைஇயேசுவை கீழே விழச்செய்தது. ஏதோ ஒரு பாவம், மதுபானம், வேசித்தனம், பொய், திருட்டு இந்தப் பாவத்தைவிட முடியவில்லை. இந்தப்பாரம் என்னை அழுத்துகிறது. நானும் நிமிர்ந்து நடக்க முடியாமல் தள்ளாடி தள்ளாடி நடக்கின்றேன். என் பாவம் போக்கும் ஆண்டவரே.

**செபம்:**

இதயத்தில் தாழ்ச்சியும், சாந்தமுமுள்ள இயேசுவே, மனுக்குலத்தின் பாவச்சுமை தாங்காது விழுந்த இயேசுவே, என் பாவத்தால் பலமுறை நீர் விழுந்தீர் இயேசுவே, பலமுறை நான் பாவக்குழியில் வீழ்ந்தாலும் உம்மைப்பின்பற்றி என்றுமே எழுந்திடும் வரம் தாரும் இயேசுவே, ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**

**ஐந்தாம் நிலை: இயேசு எருசலேம் பெண்களுக்கு ஆறுதலளிக்கிறார்**

**திவ்விய இயேசுவே...**

**இறைவார்த்தை:** என் மனத்தில் கவலைகள் பெருகும்போது என் உள்ளத்தை உமது ஆறுதல் மகிழ்விக்கின்றது. திருப்பாடல் 94:19

**சிந்தனை:**

கொடிய யூதர் மத்தியிலும் இரக்கம் உள்ளவர்கள் இருக்கின்றனர். இயேசு என் வேதனைகளைக் கண்டு கண்ணீர் தேற்றுகின்றார். இயேசுவோ எனக்காக அழவேண்டாம், உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள் என்று மொழிகிறார். நான் அயலாருக்கு ஆறுதல் அளிக்கின்றேனா? அல்லது அவர்களை பாவச்சேற்றில் மூழ்கடித்து ஆனந்தம் அடைகிறேனா? கைம்பெண்களின் சொத்துக்களை





அபகரித்து அந்த அபலைப் பெண்களின் கண்ணீருக்கு காரணமாக இருந்திருக்கிறேனா? ஓ, கிறிஸ்தவனே, உனக்காக தேவ சந்நிதியின் கதவு திறந்திருக்கிறது. அதோ தேவனின் இருதயம், நீ இருக்க வேண்டிய இடம், உள்ளே போ, சிற்றின்ப ஆசையை தூண்டிவிடும் பசாசு உன்கிட்டே நெருங்காது.

**செபம்:**

குற்றமற்ற தூய இயேசுவே, எங்கள் குற்றத்தை நீர் சுமந்தீரே, ஆண்டவரே எங்களுக்காகவும் எங்கள் மக்களுக்காகவும் எம்மைச் சுற்றியுள்ள பெண்கள் அனைவருக்காகவும் அழுகிறோம். எங்களின் கண்ணீரைக் கண்டு எம் குறையைத் தீரும் ஆண்டவரே, ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**

**ஒன்பதாம் நிலை: இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்**

**திவ்விய இயேசுவே...**

**இறைவார்த்தை:** அப்போது ஆண்டவரின் தூதர் அங்கு வந்து நின்றார். அறை ஒளியமயமாகிறது. அவர் பேதுருவை தட்டியெழுப்பி "உடனே எழுந்திரு" என்றுகூற சங்கிலிகள் அவர் கைகளிலிருந்து கீழே விழுந்தன. திருத்தூதர் பணிகள் 12:7

**சிந்தனை:**

கல்வாரி உச்சியை அடையும் தருவாயில் மறுமுறையும் பாதையின் மேல் குப்புற விழுகிறார் இயேசு. அவரைத் துரிதமாய் எழுப்புவதற்கு சாட்டைகளினால் ஈவு இரக்கமின்றி அடிக்கிறார்கள் சேவகர்கள். இயேசு எழுந்து தம் முடிவின் கட்டத்தை நோக்கி, கல்வாரியை நோக்கி நடக்க மீண்டும் எழுகிறார். பேதுருவைப்போல மும்முறை உம்மை மறுதலித்தாலும் அவரைப்போல கண்ணீர் சிந்தியும், பாவி மரிய மதலேனாள்போல பாவக்குழியில் வீழ்ந்தாலும், அவளைப்போல உம் சிலுவை அடியில் நின்று அழவும், யூதாசைப்போல நம்பிக்கையிழந்து என் பாவத்திலேயே மூழ்கிச்சாகாமல் இருக்க இரக்கம் வையும். கருணை தெய்வமே, பேதுருவைத் தட்டியெழுப்பி "உடனே எழுந்திரு" என்று சொன்னதுபோல என்னையும் பாவச்சேற்றிலிருந்து தட்டியெழுப்பி என் சிலுவையை எடுத்துக்கொண்டு உம்மைப் பின்செல்ல உதவியருளும்.

**செபம்:**

ஓ ஜெனங்களே, சிற்றின்பமே உங்களுக்கு ஆனந்தமென்று இராப்பகலாய் அலைந்தோடி பாவ துர்நாற்றக் குழியில் விழுகிறீர்கள். இங்கே என்னிடம் வாருங்கள். தமது இரத்தத்தில் மூர்ச்சையால் விழுந்துக் கிடக்கும் இயேசுவைப் பாருங்கள், அசுத்த மோகபாவம் அற்பக்காரியங்களென்று

துணிந்து செய்தீர்கள். கண்ணால் அசுத்தத்தைப் பார்த்தீர்கள், இரட்சகர் இயேசு உங்களுக்காக இதுவரைபட்ட வேதனை போதாதா? இன்னும் இவர் சரீரத்தில் வேதனைப்பட வேண்டுமா? கண்களின் இச்சை, உடலின் இச்சையில் விழுந்து கிடக்கும் எனக்கு எழுந்து கல்வாரிப் பாதையில் இறுதிமூச்சுவரை உம்மைப் பின்செல்ல அருள்புரியும். ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**

**பத்தாம் நிலை: இயேசுவின் மேலாடையைக் களைகிறார்கள்**

**திவ்விய இயேசுவே..**

**இறைவார்த்தை:** அவரது இளமையைச் சுருக்கிவிட்டீர். அவருக்கு வெட்கத்தை ஆடையாக்கினீர். திருப்பாடல் 29:45

**சிந்தனை:**

தன் திருமகனுக்கு அன்னை மரியா செய்த ஆடை என்பதால் யாருக்கும் இதைக்கிழிக்க மனமில்லை. நடைமுறை என்னவென்றால் சிலுவையில் அறையப்பட்டவர்களின் உடைமைகள் சிலுவையில் அறைந்தவர்களுக்குச் சொந்தம். இருப்பினும் அதை உடைமையாக்க சீட்டு போட்டார்கள். உடையை நெய்த அன்னையை மனுக்குலம் முழுவதற்கும் உடைமையாக்கினார்கள். உலகை பசுமையாய் போர்த்திய கடவுள் எல்லார்க்கும் முன்னால் அவமானப்பட்டு நிற்கிறார். அந்தரங்கத்திலும் இருட்டிலும் எவரும் அறியார் என்ற கருத்தோடு நாம் செய்த முறைகேடான செயல்களுக்காக வெட்ட வெளியில் தேவன் அவனமானப்பட்டு வேதனைப்பட்டு நிற்கிறார். இதற்கு யார் காரணம், நாம் தானே.

**செபம்:**

அன்பான இயேசுவே, என் கெட்ட நாட்டங்களை என்னிலிருந்து உரித்துபோடும். முறைகேடான என் உறவுகளை எண்ணிலிருந்து அப்புறப்படுத்தும். உம் ஆடையை உரிந்தேன், கற்பழித்தேன், தூய்மையாக்கும் இயேசுவே, வானவர் ஏங்கி நெஞ்சம் பதைத்திட உம் மானத்தைப் போக்கிய பாவி நான், இயேசுவே என்னை மன்னியும், ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**

**பதினோராம் நிலை: இயேசுவை சிலுவையில் ஆணிகளால் அறைகிறார்கள்**

**திவ்விய இயேசுவே...**

**இறைவார்த்தை:** அங்கே அவர்கள் இயேசுவையும் அவரோடு வேறு இருவரையும் சிலுவைகளில் அறைந்தார்கள். அவ்விருவரையும் இரு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாக அறைந்தார்கள். யோவான் 19:18





**சிந்தனை:**

இயேசுவை சிலுவைமேல் கிடத்தி கைகளையும், கால்களையும் ஆணிகளால் அடிக்கிறார்கள். அடிக்கும் சுத்தியலின் சத்தத்தையும் ஆணிகள் தசைகளை குத்தி ஊடுருவதையும் நாமே நம் மனக்கண்முன் காண்போம். இதனை புனித பவுல் கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தில் "இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டவராய் உங்கள் கண்முன் படம் பிடித்துக் காட்டப்படவில்லையா?" என்று குறிப்பிடுகிறார். ஆணிகளை மடக்குவதற்காகச் சிலுவையை குப்புறக் கிடத்தி அவர்மேல் போட்டு அடித்து மடக்குகிறார்கள். சிலுவையை தூக்கி குழிக்குள் போட்டு அந்த அதிர்வில் இயேசுவின் உடல் முழுவதும் வேதனை ஏற்படுகிறது. மண்ணுலகு அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. விண்ணகம் அவரை கைவிட்டுவிட்டது. இரண்டிற்கும் இடையே தொங்குகிறார். குணமளித்த கரங்கள், மனம்மாறிய பாவியை மன்னித்த கரங்கள், கருணை உள்ளம் நன்மை செய்தே சுற்றித்திரிந்த கால்களுக்கு சன்மானம் கொடிய ஆணிகளே.

**செபம்:**

உன்னைத் துன்புறுத்துவோரை மன்னிக்கிறாயா? அவர்களை அன்பு செய்கிறாயா? பழிக்குப்பழி வாங்குகிறாயா? நீதிமன்றத்திற்கு இழுத்துச் செல்கிறாயா? இறைவா, என் பகைவரை மன்னிக்க வரம்தாரும் ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**

**பன்னிரெண்டாம் நிலை: இயேசு சிலுவையில் உயிர் துறக்கிறார்**

**திவ்விய இயேசுவே...**

**இறைவார்த்தை:** நண்பகல் மூன்று மணியளவில் இயேசு, "ஏலி, ஏலி லெமா சபத்தானி?" அதாவது "என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று உரத்த குரலில் கத்தினார். இயேசு மீண்டும் உரத்தக் குரலில் கத்தி உயிர் விட்டார். மத்தேயு 27: 46,50.

**சிந்தனை:**

அடிமைபோல பிறந்தார், பாவிப்போல மரிக்கிறார், பறவைகளுக்கு கூடுகள் உண்டு, விலங்கினங்களுக்கு குகைகள் உண்டு, ஆனால் மனுமகனுக்கு தலைசாய்க்கவும் இடமில்லை. எனவே, சிலுவையில் தலைசாய்க்கிறார். இதுவரை மனிதன் கண்டுபிடித்தவற்றிலேயே மிகக்கொடூரமான வேதனைகள் நிறைந்ததும், பயங்கரமுள்ளதுமான வாதையை ஆறுமணிநேரம் அனுபவித்த பிறகு இயேசு மரித்தார். துன்ப வேளையிலும் அன்பு மொழிகள், தகிக்கும் வெயிலிலும் அந்தரித்த வேளையிலும் அருள்மொழிகள் உச்சரிக்கும் வேளையிலும் மதுர

மொழிகள் நான் என் உள்ளத்தை உற்றுப்பார்த்தால் அந்தோ, எவ்வளவு வித்தியாசம் ஒப்பிட்டுப்பார், உன்னையும் என்னையும் போன்ற சாதாரண மக்கள் மோட்சத்திற்குப் போவதற்காக இயேசு மரித்தார். பதிலுக்கு அவர் உன்னிடம் கேட்பதெல்லாம் உன் தேவனாகிய ஆண்டவரை உன் முழு இருதயத்தோடும் முழு ஆன்மாவோடும் முழு வலிமையோடும் முழு மனதோடும் அன்பு செய்ய வேண்டும் என்பதே.

**செபம்:**

எங்கு துன்பமுள்ளதோ, அங்கே என் உயிரைக் கொடுத்தேனும் அங்கு இன்பளிக்க எனக்கு வரமருள்வாய் இறைவா, என் சாவான பாவத்தால் உம் உயிரைப் போக்கினேன். என் அற்பப் பாவத்தால் உம்மைக் காயப்படுத்தினேன். மாந்தர்க்கு மீட்பளித்த இயேசுவே, நான் செய்த தவறுகளுக்காக என்னை மன்னியும், ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**

**பதிமூன்றாம் நிலை: இயேசுவின் உடல் அவர் தாய்மடியில் கிடத்தப்படுகிறது**

**திவ்விய இயேசுவே...**

**இறைவார்த்தை:** அவர்கள் இயேசுவின் உடலை எடுத்து யூத அடக்கமுறைப்படி நறுமணப் பொருள்களுடன் துணியால் சுற்றிக் கட்டினார்கள். யோவான் 19:40

**சிந்தனை:**

சிலுவையிலிருந்து இறக்கப்பட்ட திருவுடலை தம் மடியில் ஏற்று உற்றுப்பார்க்கிறாள் அந்தத்தாய். 33 ஆண்டுகளுக்கு முன்பாக இதே மகனை வேறொரு மலையில் குழந்தையாய் பெற்று மடியில் வைத்து தாலாட்டி, சீராட்டி, பாலூட்டி மகிழ்ந்தாள். மழலை மொழியில் மகிழ்ச்சி கொண்டவர் இன்று இம்மலையில் (கல்வாரி) அவ்வுடலை மடியில் வைத்துக்கொண்டு கண்ணீர் விடுகிறார். முதிர்ந்த வயதில் உன் தாய் தந்தையை ஆதரித்து காத்தாயா? அல்லது கண்ணீர் சிந்தி தத்தளிக்க வைத்தாயா? தாயிழந்து தவிக்கும் பிஞ்சுக் குழந்தைகளுக்கு உறுதுணையாக நின்றாயா? அப்படிப்பட்ட கருணை நிறுவனங்களுக்கு உதவி செய்தாயா? அன்னை மரியாவின் இந்த துயரத்திற்கு ஆறுதல் கூறுவது என்றால் நாம் பாவம் செய்யாமல் இருப்பது மட்டுமே.

**செபம்:**

ஓ இரக்கம் நிறைந்த இயேசுவே, என்னையும் மறந்து போகவேண்டாம், தாயில்லாப் பிள்ளைகளாய்த் தவிக்கும்படி விட்டுப்போவது சரியல்ல என்று தன் தாயை "இதோ உம் மகன்" என்று எங்களைப் பிள்ளைகளாக





ஆக்கினீர். துன்ப நாட்கள் ஊடுருவியபோதும் உலகப் பழி பாவங்களுக்காய் உம் மகனின் ஒப்பற்ற உயிரை விலையாகத் தர இசைந்த வியாகுலத் தாயே, உம்மைப்பின்பற்றி சுமைகள் தாக்கும் வேளையிலும் அவற்றைச் சுகமாக ஏற்க திடமான மனம்தாரும். ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**

**பதிநான்காம் நிலை: இறந்த இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறது**

**திவ்விய இயேசுவே...**

**இறைவார்த்தை:** யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவர் இருந்தார். அவர் பிலாத்துவிடம் போய் இயேசுவின் உடலைக் கேட்டுப்பார், அவர் அவரது உடலை இறக்கி மெல்லிய துணியால் சுற்றிப்பாறையில் குடைந்திருந்த கல்லறையில் வைத்தார். அதற்கு முன்பு யாரையும் அதில் அடக்கம் செய்ததில்லை. லூக்கா 23: 50,52-53

**சிந்தனை:**

எல்லாவற்றையும் படைத்துக் காக்கும் கடவுள் எல்லாவற்றிற்கும் உரிமையுடையவராய் இருந்தும் தலைசாய்க்க இடமில்லாமல் பிறருக்கு சொந்தமான கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார். தமக்குச் சொந்தமில்லாத இந்தக் கல்லறைக் குகையில் அடக்கம் செய்யப்படுகிறார். இலட்சியமான வாழ்வு என்பது கல்லறைக்குள் அடங்கி அழிந்துபோன வாழ்வாகிறது. பிறரை வாழ வைப்பவருக்கு கல்லறையில் இடமில்லை. இயேசு பிறரின் வாழ்வில் வாழ்கிறார். அனைவரின் மனதிலும் பிறக்க வேண்டும் என்பதற்காக அவருக்கு பிறக்க இடம் கிடைக்கவில்லை. அடக்கம் செய்ய ஒரு இடம்கூட கிடைக்கவில்லை. காரணம் அவர், அனைவரின் வாழ்விலும் அடக்கம் செய்யப்பட்டு உயிர்த்தெழ வேண்டும். நமது பாவங்கள் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டு நமது வாழ்க்கையில் இறையாட்சியின் பண்புகள் உயிர்பெறட்டும்.

**செபம்:**

கல்லறை தன்னில் எம்மையும் அடக்கி நற்கதி சேர்க்க உன் அருள் ஈவாய் இறைவா, பரிகாரப் பலியாய் உயிர்த்துறந்து அன்பிற்காய் அடங்கிய எம் இயேசுவே, உமக்காக வாழும் வாழ்க்கையில் ஏழ்மை, எளிமை, தூய்மையைப் பின்பற்றி வாழ வரம்தாரும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும்...**

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## தவக்காலம் புனித காலம்

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

அன்பர்களே, பிப்ரவரி 14ந்தேதியில் நாம் தவக்காலத்தில் அடியெடுத்து வைக்கிறோம். சாம்பல் புதனன்று தொடங்கும் இக்காலம், ஞாயிற்றுக்கிழமைகளைத் தவிர்த்து உயிர்ப்பு பெருவிழாவுக்கு முந்திய 40 நாட்களைக் கொண்டுள்ளது. கிறிஸ்தவர்கள் தங்களின் வாழ்வில் செய்த பாவங்களை நினைத்துப் பார்த்து, தங்களது வாழ்வைச் சீரமைக்கத் தேவையான சூழ்நிலைகளை உருவாக்கித் தருகின்ற காலம் இதுவாகும். ஆகவே, நம்மை கடவுளுக்கு நெருக்கமாக அழைத்துச் செல்லும் புனித காலமாக இது திகழ்கின்றது.

தவக்காலம் என்பது கிறிஸ்துவின் பாடுகளைத் தியானித்து பார்க்கவும், நமது வாழ்வை ஆழ்ந்து நோக்கவும் அழைப்பு விடுக்கிறது. இக்காலத்தில் தான, தர்மங்கள் மற்றும் ஒறுத்தல் முயற்சிகள் வழியாக நாம் நமது பாவங்களுக்குப் பரிகாரம் செய்ய வேண்டுமென திருஅவை விரும்புகிறது. பகைமையும் வெறுப்பும் ஆதிக்க மனநிலையும் கொண்ட இவ்வுலகில் அன்பின் அரசாட்சியை நிறுவ வந்த இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்க இத்தவக்காலம் நம் ஒவ்வொருவரையும் வழிநடத்திச் செல்கிறது என்பதே உண்மை.

தவம் என்பது யூத மரபு மற்றும் விவிலிய அடிப்படையில் இருந்து, கிறிஸ்தவர்கள் கற்றுக்கொண்ட பழக்கமாகும். முற்காலம் தொட்டே யூதர்கள் தாங்கள் செய்த பாவங்களுக்குப் பரிகாரமாக, பல நாட்கள் நோன்பு மேற்கொண்டு சாக்கு உடையுடன் சாம்பலில் அமர்ந்து இறைவனின் மன்னிப்பை வேண்டுவர். இப்பழக்கம் தொடக்கக் கிறிஸ்தவர்கள் வழியாக, கிறிஸ்தவ சமயத்திலும் நடைமுறைக்கு வந்தது. இதன் விளைவாக, பாவங்கள் செய்தவர்கள் நோன்பிருந்து தவம் செய்ய வேண்டும் என்ற வழக்கம் தோன்றியது.

கிறிஸ்தவர்கள் பலரும் தனிப்பட்ட விதத்தில் பாவத்திற்கு பரிகாரமாக நோன்பு நோற்று தவம் இருந்தாலும், அனைவராலும் இந்த பழக்கம் பின்பற்றப்படவில்லை. அனைவரும் தவம் செய்யும் ஒரு காலத்தை உருவாக்க விரும்பியத் திருஅவை, இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு பெருவிழாவுக்கு முந்திய சில நாட்களை தவக்காலமாக உருவாக்கியது. படிப்படியாக இத்தவ நாட்களின் எண்ணிக்கை நாற்பது என்றானது. இக்காலத்தில், கிறிஸ்தவ சமயத்தில் புதிதாக இணைய விரும்புவோருக்கு புகுநிலை பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. கடவுள் தன்மையில் விளங்கிய இயேசு நம்மீது கொண்ட அன்பினால், தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவையேற்று மனிதரானார். அவர் சாவை





ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவை சாவையே ஏற்கும் அளவுக்கு தந்தை கடவுளுக்கு கீழ்ப்படிந்தார். "தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோவா 15:13) என்று கூறிய அவர், பாவிகளான நமக்காக, நாம் நிலைவாழ்வு பெறுவதற்காக, நம்மை தமது நண்பர்களாக ஏற்றுக்கொண்டு தமது உயிரை பலியாக்கினார்.

ஆண்டவராகிய இயேசு உலக மக்களின் பாவங்களுக்குப் பரிகாரமாக, தம்மையே சிலுவையில் பரிகாரப் பலியாக ஒப்புக்கொடுத்தார். பாவிகளான நமக்காக இறைவனாகிய இயேசு மனிதராகி, சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்கு தம்மைத் தாழ்த்திக் கொண்டார். அவரது அன்பையும் இரக்கத்தையும் நினைத்து, நமது பாவங்களுக்காக மனம் வருந்தி அவரிடம் மன்னிப்பு வேண்ட தவக்காலம் உதவுகிறது. முற்காலத்தில் நாற்பது நாட்களும் ஒரு வேளை மட்டுமே உணவு உண்ணும் வழக்கம் இருந்தது குறிப்பிடத்தக்கது.

தவக்காலத்தில் சிலுவைப்பாதை பக்தி முயற்சியிலும், திருப்பலி வழிபாட்டிலும் அதிக அளவில் நாம் பங்கு பெறுகிறோம். தீயப் பழக்கங்களை விட்டொழித்து, தூய வாழ்வுக்கு நம்மைத் தயார் செய்ய ஆர்வம் காட்டுகிறோம். ஏழை, எளியவர்களுக்கும் அதிக அளவில் உதவி செய்கிறோம். மேலும், தவக்காலத்தின் வெள்ளிக்கிழமைகளில் அசைவ உணவைத் தவிர்ப்பதும், சாம்பல் புதன் மற்றும் புனித வெள்ளி தினங்களில் ஒரு வேளை மட்டுமே உணவு உண்பதும் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் வழக்கமாக உள்ளது.

இயேசு கிறிஸ்து தவத்தைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்: "மக்கள் பார்க்க வேண்டும் என்று அவர்கள் முன்பு உங்கள் அறச்செயல்களைச் செய்யாதீர்கள். நீங்கள் தர்மம் செய்யும் போது உங்களைப் பற்றித் தம்பட்டம் அடிக்காதீர்கள். உங்கள் வலது கை செய்வது இடது கைக்குத் தெரியாதிருக்கட்டும். நீங்கள் நோன்பு இருக்கும்போது முகவாட்டமாய் இருக்க வேண்டாம். அப்பொழுது நீங்கள் நோன்பு இருப்பது மறைவாய் இருக்கிற விண்ணகத் தந்தைக்கு மட்டும் தெரியும். அவர் உங்களுக்கு ஏற்ற கைம்மாறு அளிப்பார்."

இயேசு கிறிஸ்து தமது இறையரசுப் பணியைத் தொடங்கும் முன், 40 நாட்கள் நோன்பு இருந்து தந்தையாம் கடவுளோடு உறவாடினார். இதன் அடிப்படையிலேயே, திருச்சபை தவக்காலத்தை நாற்பது நாட்கள் கடைபிடிக்கிறது. தவக்காலத்தின் அனைத்து நாட்களிலும் திருப்பலியில் பங்கேற்று, சிலுவைப்பாதை செய்வது அல்லது இயேசுவின் திருப்பாடுகளை தியானம் செய்வது சிறந்த பக்தி முயற்சியாக கருதப்படுகிறது. இவ்வாறு கிறிஸ்துவின் பாடுகளில் பங்கேற்று நமது பாவங்களுக்கு பரிகாரம் செய்ய முடியும்.

தவக்காலத்தின் முதல் நாளான சாம்பல் புதனன்று, நம் நெற்றியில் பூசப்படும் சாம்பல் மனித வாழ்வின் நிலையாமையைக் குறிக்கிறது. நிலையற்ற உலகின்மீது அதிக நாட்டம் கொள்ளாமல், நித்திய வாழ்விற்கான தயாரிப்பை மேற்கொள்வதற்கான அழைப்பாக இது அமைகிறது. தூய்மையற்ற எதுவும் விண்ணகத்தில் நுழைய முடியாது என்பதை உணர்ந்து, கடவுளுக்கு ஏற்றத் தூயவர்களாய் நம்மை மாற்றிக்கொள்வது அவசியம். இத்தகைய ஒரு புனிதப்படுத்தும் காலமாகவே தவக்காலம் நமக்குத் தரப்பட்டுள்ளது.

பாவத்தின் ஆதிக்கத்தால் வீழ்ச்சி அடைந்த மனிதகுலத்தை மீண்டும் புனிதத்தில் நிலைநிறுத்தவே இறைமகன் இவ்வுலகிற்கு வந்தார். இயேசு கிறிஸ்து மனிதர்களின் மீது கொண்ட அன்பின் ஆழமே அவரது உயிரை நமக்காகப் பலியாக்கத் தூண்டியது. நமது மீட்புக்காக விண்ணகத்தில் இருந்து இறங்கிய அவரது அன்புக்கு பதிலன்பு செலுத்தும் காலமாக இத்தவக்காலம் அமைந்துள்ளது. நமது மனமாற்றம் மற்றும் பரிகார வாழ்வின் வழியாக இயேசு அளிக்கின்ற மீட்புக்கு நம்மைத் தகுதிப்படுத்துவோம்.

"உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போன்று நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்" (மத் 5:48) என்னும் இயேசுவின் அழைப்பிற்கு செவிமடுத்து நடப்பதிலேயே நமது வாழ்வு புனிதம் அடைகிறது. நமது செபங்களும் நற்செயல்களும் நம்மைச் சுற்றியுள்ள அனைவரின் நல்வாழ்வுக்கும் பயனளிப்பதாக அமையட்டும். பாவங்களைக் கண்டு பயந்தோடவும், புனிதத்தில் நடைபயிலவும் இந்த தவக்காலம் உதவட்டும். கடவுளின் ஆட்சிக்கு நம்மை உட்படுத்தும் புனித காலமாக இது அமையட்டும்.

## திருஅவைச் செய்திகள்

சகோ. சூசைராஜ், ச.ச.

### ஆசீர் வழங்குவது என்பது அங்கீகாரத்தின் அடையாளமல்ல

ஒரே பாலினத் தம்பதியருக்கு ஆசீரை வழங்குவது என்பது அவர்களின் ஒன்றிணைந்த வாழ்வை அங்கீகரிப்பதன் அர்த்தமாக நோக்கப்படக் கூடாது என மீண்டும் ஒருமுறை, குனைரஉயை ளரிடீடைஉயளெ என்ற திருஅவைக்கோட்பாட்டு அறிக்கை குறித்து விளக்கமளித்துள்ளது திருஅவையின் விசுவாசக் கோட்பாட்டுத் துறை.

Fiducia supplicans என்ற பெயரில் டிசம்பர் மாதம் 18ஆம் தேதி வெளியிடப்பட்டுள்ள திருஅவைக் கோட்பாட்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளவைகளின் நோக்கம், திருமணம் குறித்த திருஅவைக் கோட்பாட்டில் எவ்வித மாற்றத்தையும் குறிப்பதாக இல்லை எனவும், ஒரே பாலினத் தம்பதியருக்கு ஆசீர் வழங்குவது என்பது, அவர்களின் ஒன்றிப்பு





வாழ்வை அங்கீகரிப்பதன் அர்த்தமாகாது, மாறாக, இறையாசீர் எவருக்கும் மறுக்கப்படக்கூடாது என்பதை அடிப்படையாகக் கொண்டது எனவும் கூறுகிறது.

Francesco அமைப்பின் தலைவராக பேராயர் Sorrentino மீண்டும் நியமனம்!

இந்த அமைப்பின் நிறுவன மற்றும் நிர்வாக அம்சங்களை வடிவமைப்பதில் பல்வேறு உலகப் பகுதிகளைச் சேர்ந்த சுறுசுறுப்பான இளைஞர்களின் ஈடுபாட்டையும் ஒப்புக்கொண்டுள்ளார் திருத்தந்தை.

### ஊழல், அதிகார முறைகேடு மற்றும் சட்டவிரோதச் செயல்களை எதிர்ப்போம்!

பின்வாங்காதீர்கள், கைவிடாதீர்கள், ஒரு சிறந்த உலகத்தைக் கனவு காண்பதை நிறுத்தாதீர்கள் என்றும், இன்று, போர்கள் மற்றும் நேரெதிர்க் கருத்து முரண்பாடுகளால் பிளவுபட்ட உலகில், கனவு காணும் திறனை இழக்கும் ஆபத்தில் இருக்கின்றோம் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்

DIALOP என்ற கூட்டமைப்பினரைத் திருப்பீடத்தில் சந்தித்த வேளை, அவர்களிடம் இவ்வாறு கேட்டுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தடையை உடைக்கும் வலிமை, பலவீனமானவர்கள்மீது கவனம், சட்டத்தை மேம்படுத்துதல் ஆகிய மூன்று தலைப்புகளின்கீழ் தனது சிந்தனைகளைப் பகிர்ந்துகொண்டார்.

### சட்டத்தை மேம்படுத்துதல்

சட்டத்தை மேம்படுத்துதல் என்பது, நாம் இதுவரை கூறியிருக்கின்ற ஊழல், அதிகார முறைகேடு மற்றும் சட்டவிரோதம் ஆகியவற்றின் கேடுகளை எதிர்த்துப் போராடுவதற்கான அர்ப்பணிப்பைக் குறிக்கிறது என்று எடுத்துக்காட்டிய திருத்தந்தை, நேர்மையில் மட்டுமே நலமான உறவுகளை ஏற்படுத்த முடியும் என்பதுமட்டுமன்றி, சிறந்த எதிர்காலத்தை கட்டியெழுப்புவதில் நம்பிக்கையுடனும் திறமையுடனும் ஒத்துழைக்க முடியும் என்றும் விளக்கினார்.

### போரில் பலியாகுவோரை போரின் பக்க விளைவுகள் என ஒதுக்க முடியாது

போரில் பொதுமக்கள் உயிரிழப்பது ஒரு துணைப் பாதிப்பு அல்லது தவிர்க்க முடியாதது என எவரும் ஒதுங்கிவிட முடியாது என திருத்தந்தை வெளியிட்ட டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

அமைதி என்ற ஹேஷ்டாக்குடன் இரு டுவிட்டர் செய்திகளை வெளியிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் முதல் டுவிட்டரில்,

போரினால் பலியாகும் பொதுமக்களை, போரின் பக்க விளைவுகள் என எவரும் ஒதுக்கமுடியாது, ஏனெனில் இவ்வாறு மடிந்த மக்கள் தங்களுக்கென பெயர்களையும் முகவரிகளையும் கொண்ட மக்கள், தங்கள் வருங்காலம் பறிக்கப்பட்டு அனாதைகளான குழந்தைகள், மற்றும் பசி, தாகம், குளிர் இவைகளால் துன்புறுபவர்கள், அல்லது ஊனமாக்கப்பட்டவர்கள் என குறிப்பிட்டுள்ளார்.

தன் இரண்டாவது டுவிட்டர் செய்தியில், மனிதனின் மாண்புக்கு ஊறுவிளைவிப்பதாக போர் உள்ளது என குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். போருக்கு பலியானவர்கள் ஒவ்வொருவரின் கண்களை நம்மால் பார்க்க முடிந்தால், அதிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிந்தால், நமக்குத் தெரியும், எதற்காக போர் என்பது நடத்தப்படுகின்றது என்று. போர் என்பது ஒரு பெருந்துன்பம் அன்றி வேறு எதுவுமில்லை, இது இவ்வுலகின் அனைத்து மக்களின் மாண்புக்கும் ஊறுவிளைவிக்கும் ஒரு படுகொலை, என மேலும் கூறியுள்ளார் திருத்தந்தை.

உலகின் மிகவும் பலம் வாய்ந்த ஆயுதங்களான விசுவாசம் மற்றும் செபத்துடன் புனித பூமிப் பகுதிக்குச் சென்று, அங்கு இயேசு வாழ்ந்த அனைத்து இடங்களையும் சந்தித்தவேளையில், ஏன் அங்கு அமைதியை காணமுடியவில்லை என்ற கேள்வியே தன்னில் தொக்கி இருந்ததாகக் கூறும் கர்தினால் க்ரயேவிஸ்கி அவர்கள், கிறிஸ்மஸ் காலத்தில் கூட காசாவிலும் உக்ரைனிலும் போரும் கொலைகளும் தொடர்ந்து கொண்டிருப்பது வேதனைத் தருவதாக உள்ளது என்றார்.








## சுடர் வாசகர் போட்டி - 104

1. புனித பேசில்
2. ஏலி
3. சலேசிய சபையைச் சார்ந்தவர்
4. உலக ஈடுபாடுகளில் பற்றின்மை, பொதுநலம்
5. டோமினிக் சாவியோ
6. ஒரு பீப்பாய் நிறைய புளித்த காடியை வைத்தாலும் ஈக்களை ஈர்க்காது. ஆனால் ஒரு கரண்டித் தேன் பல ஈக்களை ஈர்க்க முடியும் என்பது
7. 350 ஆண்டுகள்
8. கத்தாசியா
9. கஸ்பார், மெல்காயர், பல்தசார்
10. தொழுநோயால்
11. ஜோஸ்டொமிகோ மற்றும் மெர்சிடியஸ்
12. திருத்தந்தை 23ம் அருளப்பர்
13. புனித பவுல்
14. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் படைத் திருப்பணியாளர்களில் சிறப்பாக சேவை செய்வோருக்கு அளிக்கப்படும் விருது
15. ஏழை நோயாளிகளுக்கான மருத்துவமனை

### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Ms. R. C Malathi, Trichy

Mrs. Sirumalar. Jebamani, Bangalore

Mr. Stephen Antony, Dindigul

## சுடர் வாசகர் போட்டி 105

1. ஆண்டவரோ நம் அனைவரின் தீச்செயல்களையும் அவர்மேல் சுமத்தினார்- திருவிவிலியத்தில் எங்குள்ளது?
2. "போர் என்பது ஒரு பெருந்துன்பம்" யார் கூறியது?
3. திருமணம் செய்து கொண்ட ஒரே பாலினத்தவருக்கு அருட்தந்தையர் ஆசீர் வழங்கலாமா?
4. வானதூதர் அவரை "தட்டி எழுப்பி" யாரை எழுப்பினார்?
5. "நீர் அரசுரிமையுடன் வரும்போது என்னை நினைவு கூறும்" யார் யாரிடம் கூறியது?
6. எதன் அடையாளமாக வில்லை வானத்தில் வைப்பதாக கடவுள் கூறினார்?
7. பேதுருவிற்கு பிறகு அதிக காலம் திருத்தந்தையாக இருந்தவர் யார்?
8. புனித ஜான் டி பிரிட்டோ தனது பெயரை என்னவாக மாற்றிக் கொண்டார்?
9. அரு. யுசேபியா பிலோமினோ ஏனஸின் பெற்றோர் யார்?
10. "போரில் பலியாகுவோரை போரின் பக்க விளைவுகள் என்று கூறமுடியாது" யார் கூறியது?
11. அவரது இளமையை சுருக்கி விட்டீர் - இந்த இறைவார்த்தை திருவிவிலியத்தில் எங்குள்ளது?
12. "சிவந்த மண் பூமி" எந்த புனிதர் இறந்த இடம்?
13. நோவா நிகழ்ச்சியில் தண்ணீர் எந்த அருள்அடையாளத்தின் அடையாளமாக இருக்கிறது?
14. அரு. யுசேபியா பிலோமினா ஏனஸ் அவர்களை அருட்சகோதரிகள் முதலில் எந்த வேலைக்கு அழைத்தார்கள்?
15. புனித அருளானந்தர் எந்த ஊரில் எப்படி இறந்தார்?

### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ.100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

தீபகம்
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044 - 26428162.

பெயர்: ................................
முகவரி: ................................
................................
................................





## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

புனித பெர்பெத்துவா, பெலிசிட்டி

தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு

தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு

புனித யோசேப்பு, கன்னி மரியாவின் கணவர் சூசையப்பர் பெருவிழா

புனித மாங்க்ரோவேகோ துரீபியுஸ்

குருத்து ஞாயிறு

சிலுவைப் பாதை

உயிர்ப்பு ஞாயிறு காலை திருப்பலி

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

உயிர்த்தார் வாழ்வளிக்க
புனித வாரம் நம்மை புனிதமாக்கும் வாரம்
புனித பெர்பெத்துவா, பெலிசிட்டி வாழ்வு தரும் பாடம்
திருஅவையின் செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இம்மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை பிப்ரவரி 15ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# பிப்ரவரி மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | வி | | 1அர. 2: 1-4, 10-12 | மாற்கு 6: 7-13 |
| 2 | வெ | ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் | I. மலாக். 3: 1-4<br>II. எபி. 2: 14-18 | லூக். 2: 22-32 |
| 3 | ச | | 1அர. 3: 4-13 | மாற்கு 6: 30-34 |
| 4 | **ஞா** | **பொதுக்காலம் 5ம் ஞாயிறு** | I. யோபு. 7: 1-4, 6-7<br>II. 1கொரி. 9: 16-19, 22-23 | மாற்கு 1: 29-39 |
| 5 | தி | புனித ஆகத்தா | 1அர. 8: 1-7, 9-13 | மாற்கு 6: 53-56 |
| 6 | செ | புனித பால் மிக்கி | 2அர. 8: 22-23, 27-30 | மாற்கு 7: 1-13 |
| 7 | பு | புனித கொன்சாலோ கார்சியா | 1அர. 10: 1-10 | மாற்கு 7: 14-23 |
| 8 | வி | புனித ஜெரோம் எமிலியானி, ஜோசப் பக்தீத்தா | 1அர. 11: 4-13 | மாற்கு 7: 24-30 |
| 9 | வெ | | 1அர. 11: 29-32,12:19 | மாற்கு 7: 31-37 |
| 10 | ச | புனித ஸ்கொலாஸ்திகா | 1அர. 12: 26-32, 13:33-34 | மாற்கு 8: 1-10 |
| 11 | **ஞா** | **பொதுக்காலம் 6ம் ஞாயிறு** | I. லேவி. 13: 1-2, 44-46<br>II. 1கொரி. 10: 31-11:1 | மாற்கு 1: 40-45 |
| 12 | தி | | யாக். 1: 11-1 | மாற்கு 8: 11-13 |
| 13 | செ | புனிதர்கள் சிரில், மெத்தோடியஸ் | யாக். 1: 12-18 | மாற்கு 8: 14-21 |
| 14 | **பு** | **திருநீற்றுப் புதன் - தவக்காலம்** | யோவே. 2: 12-18<br>2கொரி. 5: 20: 6:2 | மத். 6: 1-6, 16-18 |
| 15 | வி | | இச. 30: 15-20 | லூக். 9: 22-25 |
| 16 | வெ | | எசா. 58: 1-9 | மத். 9: 14-15 |
| 17 | ச | மரியின் ஊழியர் சபை நிறுவிய ஏழு புனிதர்கள் | எசா. 58: 9-14 | லூக். 5: 27-32 |
| 18 | **ஞா** | **தவக்காலத்தின் முதல் ஞாயிறு** | I. 1சாமு. 9: 8-15<br>II. 1பேதுரு 3: 18-22 | மத். 5: 17-37 |
| 19 | தி | | லேவி. 19: 1-2, 11-18 | மத். 25: 31-46 |
| 20 | செ | | எசா. 55: 10-11 | மத். 6: 7-15 |
| 21 | பு | புனித பீட்டர் தமியான் | யோனா. 3: 1-10 | லூக். 11: 29-32 |
| 22 | வி | திருத்தூதர் புனித பேதுருவின் தலைமைப்பீடம் விழா | 1பேதுரு 5: 1-4 | மத். 16: 13-19 |
| 23 | வெ | புனித போலிகார்ப்பு | எசே. 18: 21-28 | மத். 5: 20-26 |
| 24 | ச | | இச. 26: 16-19 | மத். 5: 43-48 |
| 25 | **ஞா** | **தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு** | I. தொநூ. 22:1-2, 9-13, 15-18<br>II. உரோ. 8: 31-34 | மாற்கு 9: 2-10 |
| 26 | தி | | தானி. 9: 4-11 | லூக். 6: 36-38 |
| 27 | செ | | எசா. 1: 10, 16-20 | மத். 23: 1-12 |
| 28 | பு | | எரே. 18: 18-20 | மத். 20: 17-28 |
| 29 | வி | | எரே. 17: 5-10 | லூக். 16: 19-31 |